# மாகாணக்கல்வித் திணைக்களம்

## வடக்கு மாகாணம்

**தரம் - 11**

**மனைப்பொருளியல்**

பெயர் - ..................

**இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023**

நேரம் :- 3 மணி 10 நிமிடம்

**பகுதி I**

**அறிவுறுத்தல் :-**

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உங்கள் விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (X) இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. தவிடுள்ள அரிசியில் காணப்படும் போசணை.
(1) புரதம், கல்சியம் (2) தயமின், செலுலோசு
(3) அயடின், இரும்பு (4) கொழுப்பு, விற்றமின் C

2. உணவுக் கூம்பின் அடிப்படையில் பாலும், பாலுற்பத்திகளும் உள்ளெடுக்கும் அளவு.
(1) 2 - 3 (2) 2 - 4 (3) 1 - 2 (4) 6 - 11

3. கட்டமைப்பில் காபன், ஐதரசன், ஒட்சிசனைக் கொண்ட போசணைகள்.
(1) விற்றமின், கனியுப்பு (2) புரதம், கொழுப்பு
(3) விற்றமின், கொழுப்பு (3) காபோவைதரேற்று, கொழுப்பு

4. பின்வருவனவற்றில் தனிநிரம்பாக் கொழுப்பமிலம்,
(1) ஒலேமிக்கமிலம் (2) லோரிக்கமிலம்
(3) மிஸ்ரிக்கமிலம் (4) லினோலேயிக்கமிலம்

5. விற்றமின் $B_2$ ன் இரசாயனப் பெயர்.
(1) ரைபோபிளேவின் (2) தயமின் (3) நயசின் (4) பிரிடொக்சின்

6. இரும்புச்சத்து அதிகம் கொண்ட பழம்.
(1) அன்னாசி (2) நெல்லி (3) வாழைப்பழம் (4) பப்பாசி

7. புரதம் $\xrightarrow[\text{நீர்}]{A}$ பெப்தோனும் பொலிபெப்தோனும் எனும் செயற்பாட்டில் A எனும் நொதியம்,
(1) அமிலேசு (2) இலிப்பேசு (3) பெப்சின் (4) சுக்குரோசு

8. உணவு வேளையில் நாளாந்தம் உள்ளடக்க வேண்டிய உணவின் அளவைக் காட்டும் குறிப்பு.
(1) உணவுத்தட்டு (2) போசணை அட்டவணை
(3) நாளாந்த போசணை அட்டவணை (4) உணவுக் கூம்பு

9. குழம்பாக்கப்பட்ட கொழுப்பை, கொழுப்பமிலமாகவும் கிளிசரோலாகவும் மாற்றுவது.
(1) பெப்சின் (2) திருச்சின் (3) இலிப்பேசு (4) மோல்ரோசு

10. உணவு தயாரிப்பு செயன்முறையில் உணவு பழுதடையாது பாதுகாக்கும் திரவம்.
(1) அமினோ அமிலம் (2) பென்சோயிக் அமிலம்
(3) பாமிற்றிக் அமிலம் (4) தியரிக்கமிலம்

11. பழங்கள் முற்றுவதற்கு முன், தோலை மஞ்சள் நிறமாக்க பயன்படும் வாயு.
(1) எதலீன் வாயு (2) ஒட்சிசன் வாயு
(3) பொலிபினோல் ஒட்சிடேசு (4) ஐதரசன் வாயு

12. நீர்த்துணிக்கைகள் அதிக செறிவுள்ள இடத்திலிருந்து குறைந்த செறிவுள்ள இடத்திற்கு பங்கூடு புகவிடும் மென்சவ்வினூடாக பயணம் செய்வது.
(1) பதப்படுத்தல் (2) புறப்பிரசாரணம் (3) பிசைதல் (4) கலத்தல்
13. இலங்கையில் விருந்தினருக்கு அதிகமாக வழங்கக்கூடியதும், விருந்தினருக்கு முன் வெற்று பீங்கான் மட்டும் வைத்து உணவு நிரம்பிய பாத்திரம் மேசையின் நடுவில் வைக்கும் பரிமாறல் முறை.
(1) அமெரிக்க முறை (2) பிரான்சிய முறை (3) ஜேர்மன் முறை (4) புபே முறை
14. உயரத்திற்குரிய நிறை உரிய அளவிலும் குறைவதால் இந்நிலைமை ஏற்படும்.
(1) குள்ளமாதல் (2) தேய்வடைதல்
(3) நிறைகூடுதல் (4) நிறை குறைதல்
15. பின்வருவன குறைபாட்டு நோயின் அறிகுறி ஆகும்.
- உடலில் நீர்ப்பீடனத்தன்மை குறைதல்
- புண்கள் ஆறுவதில் தாமதம்
- பல்வேர் / முரசில் இருந்து குருதி வடிதல்

இவை எக் குறைபாட்டு நோயாகும்.
(1) விற்றமின் - C (2) விற்றமின் - D (3) விற்றமின் - E (4) விற்றமின் - K
16. பெண்களுக்கு முன்கட்டிளம் வயதில் கல்சியம் போதாமையால் ஏற்படும் நோய்.
(1) ரிக்கட்ஸ் (2) ஒஸ்ரியோ பொரோஸிஸ்
(3) செரப்தல்மியா (4) ஒஸ்ரியோ மலேசியா
17. உணவைப் பழுதடையச் செய்யும் புறக்காரணி அல்லாதது.
(1) ஈரலிப்பு (2) வெப்பநிலை (3) ஒட்சிசன் (4) PH பெறுமானம்
18. பாலைத் தயிராக்க உதவும் பக்றீரியா,
(1) ஸ்ரெப்ரோகொக்கஸ் லக்டிஸ் (2) மியூகோர்
(3) அஸ்பசிலஸ் (4) பெனிசிலியம்
19. இனப்பெருக்க உறுப்புக்களுடன் சம்பந்தப்பட்ட ஓமோன்களின் சுரப்பு மூளையின் எச் சுரப்பால் தூண்டப்படுகின்றது?
(1) தையிரோயிட் (2) உமிழ்நீர்
(3) கபச்சுரப்பி (4) தெஸ்தெஸ்தரோன்
20. கட்டிளம் பருவ உள விருத்தி இலட்சணமாக அமையாதது.
(1) தர்க்க சிந்தனை (2) ஆக்கத்திறன்
(3) முடிவெடுக்கும் திறன் (4) வீரவணக்கம்
21. கருப்பையின் தொழிற்பாடாக அமைவது,
(1) முளையம் உட்பதித்தல் (2) கருக்கட்டல் நடைபெறும்
(3) பிரசவம் நிகழல் (4) விதையை தாங்குதல்
22. சாதாரண பெண்ணை விட கர்ப்பிணிப் பெண்ணுக்கு அதிகமாகத் தேவைப்படும் போலிக்கமிலம்.
(1) 100mg (2) + 200mg (3) 150mg (4) +300mg
23. கர்ப்பவதிக்கு VDRL பரிசோதனை எதற்காக மேற்கொள்ளப்படுகின்றது?
(1) குருதியமுக்கம் (2) நீரிழிவு (3) சிபிலிசு (4) இதய நோய்
24. கர்ப்பிணித் தாய்க்கு பிணியாய் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான பரிசோதனை அல்லாதது,
(1) சிறுநீர் (2) குருதியமுக்கம்
(3) நிறை அதிகரிப்பு (4) நிறை
25. சூல் முதிர்ச்சியிலிருந்து 14 நாள் வரையான காலப்பகுதி,
(1) முளையப்பருவம் (2) முதிர்மூலவுருப்பருவம்
(3) சூல் பருவம் (4) முதலுருப்பருவம்
26. கர்ப்ப காலத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய காரணி.
(1) வாந்தி (2) மலச்சிக்கல் (3) தலசீமியா (4) கால்வீக்கம்
27. குழந்தைக்கு குறைநிரப்பு, உணவு வழங்க உகந்த காலம்.
(1) 8 மாதத்தின் பின் (2) 6 மாதத்தின் பின்
(3) 4 மாதத்தின் பின் (4) 10 மாதத்தின் பின்
28. வெட்டுக்குத்துத் தையல் தைக்க உகந்த துணி வகை,
(1) எயர்டெக்ஸ் (2) பருத்தி (3) லினன் (4) பொலியஸ்ரர்
29. தைக்கா விளிம்பை சீர் செய்யவும் பிறையோரத் தையலுக்கும், அப்ளிக் தையலுக்கும் பயன்படும் அலங்காரத் தையல்.
(1) கம்பளித் தையல் (2) நரம்புத் தையல்
(3) பிரான்சிய முடிச்சு (4) அழுத்தத் தையல்

30. தழுவணை உறை தைக்க உகந்த பொருத்து.
(1) எளிய பொருத்து (2) மேற்செறி பொருத்து
(3) தட்டைப் பொருத்து (4) பிரான்சியப் பொருத்து

31. துணி மேற்புற அலங்காரத்தில் எழும்பிய தோற்றத்தைத்தரும் அலங்காரத் தையல்.
(1) நரம்புத்தையல் (2) சங்கிலித்தையல் (3) மீன்முள்ளுத் தையல் (4) பிரான்சிய முடிச்சு

32. பின்வருவனவற்றில் விலங்கு நாராக அமைவது.
(1) பருத்தி (2) லினன் (3) பட்டு (4) ரெயோன்

33. துணியைத் தீச்சுவாலைக்கு அண்மையில் கொண்டு சென்றால் மஞ்சள் நிற சுவாலையுடன் எரிவதுடன், கடதாசி எரியும் மணத்தையும் வெளிவிடுகின்றது. இந் நார் எது?
(1) லினன் (2) பருத்தி (3) டெரிலீன் (4) பட்டு

34. சாப்பாட்டறைக்குப் பொருத்தமற்ற துணையணி.
(1) நுளம்புவலை (2) கைத்துடைப்பம்
(3) மேசைவிரிப்பு (4) மேசைக்காப்புத்துண்டு

35. வீட்டிற்கு குறுங்காற்றோட்டம் கிடைப்பது.
(1) நிலாமுற்றம் மூலம்
(2) கண்ணாடிக் கற்கள் மூலம்
(3) நேர் எதிராக கதவு, ஜன்னல் அமைப்பதன் மூலம்
(4) பாவு அமைப்பதன் மூலம்

36. மனையின் தளத்திட்டம் வரையும் போது கவனத்தில் கொள்ளப்படாத விடயம்.
(1) அளவு (2) குறியீடு (3) நடைபாதை (4) பொருளாதாரம்

37. பின்வருவனவற்றில் பௌதிகம் அல்லாத வளம்.
(1) பணம் (2) மின்சாரம் (3) நீர் (4) இடவசதி

38. பணம் எனப்படும் மூலதன வருமானங்களில் ஒன்று.
(1) வட்டி (2) வாடகை (3) சேவை (4) பொருட்கள்

39. நடுநிலை வர்ணமாக அமைவது.
(1) மஞ்சள் (2) நீலம் (3) சிவப்பு (4) சாம்பல்

40. உயரமான, கம்பீரமான போன்ற இயல்பைக் காட்டும் கோடு.
(1) கிடைக்கோடு (2) நிலைக்குத்துக்கோடு
(3) வளைகோடு (4) நெளிகோடு

**(40X1=40 புள்ளிகள்)**

## பகுதி II

* முதலாம் வினாவையும் வேறு நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

* முதலாம் வினாவுக்கு 20 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**பின்வரும் நிகழ்வைக் கற்று அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தருக.**

மாதவி ஒரு ஆசிரியராவார். அவரது கணவர் விவசாயப் பண்ணை நடாத்துபவர். அவர்களுக்கு கட்டிளம் பருவ பெண்பிள்ளையும் பிள்ளைப்பருவ ஆண் பிள்ளையும் உண்டு. தமது வீட்டுக்குத் தேவையான மரக்கறிகளை தமது தோட்டத்திலிருந்து பெற்று ஆரோக்கியமாக உணவு உண்ணும் பழக்கமுடையோராக காணப்படுகின்றனர். அவர்களது வீடு நகரப்பகுதியில் நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட வீடாகும். அவர்களது வீட்டை மாதவி சிறப்பாக நிர்வகிப்பதுடன் வீட்டு அங்கத்தவர்கள் அனைவரும் மகிழ்வுடனும் சுறுசுறுப்பாகவும் இயங்குகின்றனர்.

**1)**
1. பிள்ளைப்பருவ பிள்ளைக்கு அவசியமான போசணை இரண்டு தருக.
2. இக்குடும்பத்துக்கு மதிய உணவைத் திட்டமிடுக.
3. கட்டிளம் பருவ பிள்ளை வெளிக்காட்டும் சமூக விருத்திச் செயற்பாடு இரண்டு தருக.
4. உணவு நற்காப்பு முறை நான்கு தருக.
5. புதிய மீனின் இயல்புகள் நான்கு தருக.

6. பெரும் போசணை சமிபாட்டு இறுதி விளைவு யாது?
7. இவர்கள் வீட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டு விருந்தினர்கள் 10 பேருக்கு உணவு பரிமாற உகந்த முறை யாது?
8. இவ் வீட்டுக்குப் பயன்படுத்தக்கூடிய துணையணி நான்கு தருக.
9. இடச்சிக்கன உபகரணம் இரண்டு தருக.
10. வேலைகளைத் திட்டமிட்டுச் செய்வதால் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக.

**(10X2=20 புள்ளிகள்)**

**2)**

1. துணியை செப்பனிடும் முறைகள் மூன்று தருக.
2. துணையணியின் திறப்புக்களை மூடுவதற்கு பொருத்தமான திறப்புக்கள் மூன்று தருக.
3. ஆடை நிர்மாணிப்பின் போது மாதிரியுரு ஒன்றினை உபயோகிப்பதன் நன்மைகள் நான்கு தருக.

**(3+3+4=10 புள்ளிகள்)**

**3)**

1. “போசணை” என்றால் என்ன?
2. சமிபாட்டில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?
3. (1) வயோதிபருக்கு உணவு திட்டமிடும் போது கவனத்தில் கொள்ளப்படும் விடயங்கள் இரண்டு தருக.
   (2) வயோதிபருக்கு இரவு உணவைத் திட்டமிடுக.

**(3+3+4=10 புள்ளிகள்)**

**4)**

1. தீவிர குறை போசணை என்றால் என்ன?
2. பிள்ளைப் பருவத்தினருக்கு அயடின் குறைபாட்டினால் தோன்றும் அறிகுறி மூன்று தருக.
3. உடலின் சிறந்த நிலைப்பாட்டிற்கு நீர் அவசியமாகும். இதற்கான காரணங்கள் நான்கு தருக.

**(3+3+4=10 புள்ளிகள்)**

**5)**

1. இயற்கை ஒளியும், காற்றோட்டமும் மனைக்கு கிடைப்பதால் ஏற்படும் அனுகூலங்கள் மூன்று தருக.
2. துணை வர்ணம் என்றால் என்ன? உதாரணம் தருக.
3. வீட்டின் வெளிப்புற அலங்கரிப்பில் கவனம் செலுத்தப்படும் விடயங்கள் எவை?

**(3+3+4=10 புள்ளிகள்)**

**6)**

1. கர்ப்பவதிக்கு நாளாந்தம் இரும்புத் தேவை அதிகரிப்பதற்கான காரணங்கள் 3 தருக.
2. பெண், ஆண் இனப்பெருக்க உறுப்புக்கள் ஒவ்வொன்றைக் குறிப்பிட்டு, அதன் தொழிற்பாடுகள் ஒன்று வீதம் தருக.
3. கட்டிளம் பருவ பிள்ளையின் உளவிருத்தியை வெளிக்காட்டும் இலட்சணங்கள் நான்கு தருக.

**(3+3+4=10 புள்ளிகள்)**

**7)**

1. கட்டிளம் பருவத்தின் மூன்று பிரிவுகளையும் குறிப்பிடுக.
2. கர்ப்பவதிக்கு ஏற்படும் சிறுகோளாறுகள் மூன்று தருக.
3. கர்ப்பவதிக்கு பிணியாய் நிலையத்தால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் 4 தருக.

**(3+3+4=10 புள்ளிகள்)**